207

# இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையர் : தஞ்சாவூர்

O.A.No. 5/2007
(அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில், வெண்டாக்கோட்டை கிராமம்,
பட்டுக்கோட்டை தாலூக்கா)

ராமசாமி மற்றும் பலர் .. மனுதாரர்கள்

எதிராக

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி
கோவில், வெண்டாக்கோட்டை
அதற்காக அதன் செயல் அலுவலர்,
மற்றும் பலர் .. எதிர்மனுதாரர்கள்

5ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் எதிருரை

1. இந்த எதிர்மனுதாரர் இதனடியில் வெளிப்படையாக ஒத்துக்கொண்டுள்ள விஷயங்களைத் தவிர மற்றவற்றை மறுப்பதோடு அல்லாமல் அவை யாவும் உண்மையல்ல என்றும், செல்லத்தக்கதல்ல என்றும் கூறுகிறார். அவைகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

2. மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. அவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும்.

3. இந்த எதிர்மனுதாரர் தெரிவிப்பது என்னவென்றால், மனுவில் குறிப்பிடப்பட்டு உள்ள கோவில் வெண்டாக்கோட்டை கிராமத்தின் பூர்வீக குடிகள் தச்சன், வண்ணான், வாணியன், வலையன் முத்திரையர், செட்டியார், முதலியார் ஆகியோர் தான். இன்றும் மேலே கண்டவர்களின் பெயரில்தான் ஊர் நிலங்கள் பெயர் சொல்லி அழைத்து வரப்படுகின்றன. பிற்காலத்தில் பக்கத்து ஊரிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் குறிப்பாக மனுதாரர் ராமசாமியின் முன்னோர்கள் நாட்டுச்சாலையில் இருந்தும், இந்த எதிர்மனுதாரர் காசாங்காட்டிலிருந்தும் குடிபெயர்ந்து வெண்டாக்கோட்டைக்கு வந்தவர்கள். காலப்போக்கில் வெள்ளாளர் வசதி வாய்ப்பில்லாமல் பல குடும்பங்கள் அதிகமாக இருந்ததினால் மற்றவர்கள் தலைமை தாங்கும் நிலையேற்பட்டது. தச்சன், வண்ணான், வாணியன் ஆகியோர் நலிந்து போய் விட்டதால் வெள்ளாளர், செட்டியார், முதலியார், கள்ளர் ஆகியோர் ஊர் நிர்வாகம்

தொடர்பாக கரை என்ற அமைப்பை ஏற்படுத்தினர். அதன் மூலம் ஊர் நிர்வாகம் கோவில்கள், குளம் யாவும் அவர்கள் பொறுப்பில் வந்து விட்டது. அந்த காலக்கட்டத்தில் தான் மேற்படி சுப்பிரமணிய சுவாமி கோவில் கட்டப்பட்டிருக்க வேண்டும். பின்னர் நான்கு கரைகள் கொண்ட அமைப்பாக தொடங்கப்பட்டது. மேற்படி நான்கு கரைகளில் வெள்ளாளர், செட்டியார், முதலியார், கள்ளர் ஆகிய நான்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் கோவில் உற்சவங்கள் மற்றும் கிராம நிர்வாகத்தை நிர்வாகம் செய்து வருவதாக முடிவு செய்யப்பட்டது. மேற்படி நான்கு கரைகளில் ஒவ்வொரு வருடம் ஒவ்வொரு கரையை சேர்ந்தவர்கள் நிர்வாகம் செய்து வர வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. பின்னர் அவ்வாறு நிர்வாகம் செய்வதில் சச்சரவு ஏற்பட்டதால் 19.08.1911 தேதியில் நிர்வாகம் செய்வது தொடர்பாக எழுத்துமூலமான பத்திரம் ஏற்பட்டது. மேற்படி பத்திரப்படி கீழ்க்கண்ட நபர்கள் நிர்வாகிகள் என்று முடிவு செய்யப்பட்டது.

1. கோவிந்தசாமி வேளாளர், த/பெ. தர்மராஜ் வேளாளர்
2. ராசப்ப வேளாளர், த/பெ. தம்பிராய் வேளாளர்
3. சொக்கலிங்கம் செட்டியார், த/பெ. சாமி செட்டியார்
4. கோவிந்தசாமி நாயர், த/பெ. வடமலை நாயர்
5. ரெங்கசாமி முதலியார், த/பெ. ராமசாமி முதலியார்
6. வைத்தியலிங்க வேளாளர், த/பெ. அய்ய வேளாளர்
7. வைத்தியலிங்க வேளாளர், த/பெ. திருவேங்கிட வேளாளர்
8. கோவிந்த வேளாளர், த/பெ. ராமசாமி வேளாளர்
9. அண்ணாமலை வேளாளர், த/பெ. வேலாயுத வேளாளர்
10. கோபாலசாமி செட்டியார், த/பெ. சாமி செட்டியார்
11. முருகன் செட்டியார், த/பெ. வீரப்ப செட்டியார்
12. வீராச்சாமி கோனார், த/பெ. சொக்கலிங்க கோனார்
13. பொதியப்ப தொண்டமான், த/பெ. ராமன் தொண்டமான்
14. சின்னசாமி வேளாளர், த/பெ. மெய்ய வேளாளர்
15. அய்யாதுரை செட்டியார், த/பெ. அய்யப்பெருமாள் செட்டியார்
16. ரெங்கன் செட்டியார், த/பெ. வீரப்ப செட்டியார்
17. அருணாச்சல வேளாளர், த/பெ. கந்தசாமி வேளாளர்
18. நாராயண முதலியார், த/பெ. அய்யாசாமி முதலியார்
19. கோவிந்தசாமி முதலியார், த/பெ. மாணிக்க முதலியார்

20. கோவிந்த வேளாளர், த/பெ. ரெங்க வேளாளர்

21. சாமி முதலியார், த/பெ. சொக்கலிங்க முதலியார்

22. அருணாச்சல வேளாளர், த/பெ. சிதம்பர வேளாளர்

23. ராம வேளாளர், த/பெ. அருணாச்சல வேளாளர்

மேற்படி பத்திரப்படி 23 நபர்களில் வேளாளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் 11 நபர்கள், செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் 5 நபர்கள், முதலியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் 4 நபர்கள், கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்கள் 2 நபர்கள், கோனர் இனத்தைச் சார்ந்தவர் 1 நபர் ஆவார்கள். மேலும் மேற்படி பத்திரப்படி முதல் கரையைச் சேர்ந்த கோவிந்தசாமி வேளாளர், ராசப்பா வேளாளர் ஆகிய இருவரும், இரண்டாவது கரையைச் சேர்ந்த சொக்கலிங்க செட்டியாரும், மூன்றாவது கரைச்சேர்ந்த கோவிந்தசாமி நாயக்கரும், நான்காவது கரையைச்சார்ந்த ரெங்கசாமி முதலியாரும், ஆகிய ஐவரும் ஆண்டுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் ஊர் நிர்வாகம், கோவில் நிர்வாகம் ஆகியவற்றை பார்த்து வருவதென முடிவு செய்தனர். ஆனால் மேற்படி ஐந்து நபர்களில் ஒரு கரையில் இரு நபர்கள் இருந்து பார்த்து வருவதை யாரும் விரும்பாததால் முதல் கரையைச் சேர்ந்த ராசப்ப வேளாளர் என்பவருக்கு தேர்வடம் பிடிக்கும்போது தேங்காய் உடைப்பதை எல்லோரும் எதிர்த்து மேற்படி ராசப்பாவை தேங்காய் உடைத்தல் பணியை செய்ய விடாமல் தடுத்து விட்டனர். அதன் விளைவாக தேரோட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. மேலும் 19.08.1911 தேதியிட்ட பத்திரப்படி மேற்படி ஐந்து நபர்கள் 10 ஆண்டுகள் நிர்வாகம் செய்வது, பின்பு அவர்களே பார்ப்பது என்றிருந்த நிபந்தனைகளை பொது மக்கள் நிராகரித்து விட்டதால் மனுவில் குறிப்பிட்டுள்ள கோவில் கருத்து வேறுபாடு காரணமாக சுமார் 30 ஆண்டுகளாக திருவிழா எதுவும் நடைபெறாமல் பூட்டப்பட்டு விட்டது.

4. அதன் பின்னர் மீண்டும் ஊர்மக்கள் நலன்கருதி கோவிலை பூட்டி வைத்து, திருவிழா நடைபெறாமல் வைத்திருப்பது நல்லதல்ல என்ற முடிவு செய்து கிராமத்தினர் அனைவரும் ஒன்றுகூடி இனிமேற்கொண்டு கரையும் வேண்டாம், காப்பும் வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டு பொருளாதார அடிப்படையில் மேனிவரி வசூல் செய்து கோவில் காரியங்களைச் செய்வதென முடிவு செய்யப்பட்டு வண்டிச்சக்கரம் கொண்டு தேர் அமைத்து திருவிழா கொஞ்சகாலம் நடைபெற்றது.

5. 1970ம் ஆண்டு ஊர் ஜனப் பிரச்சனையால் கிராமமக்கள் இரண்டு பிரிவாக பிரிந்து விட்டதால் மீண்டும் கோவில் காரியங்கள் முற்றிலும் தடைபட்டு விட்டது. மேலும் மேற்படி பிரச்சனையின் காரணமாக 1971–72ல் மனுவில் குறிப்பிட்டுள்ள கோவில் இந்துசமய அறநிலையத்துறை ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் பின்னர் 1911ம் ஆண்டு பத்திரப்படி முதல் கரையைச் சார்ந்தவர்கள் மேற்படி கோவில் தனக்கு மட்டுமே பாத்தியப்பட்டதென்றும், தனியார் கோவில் என்று குறிப்பிட்டு பிரிவு 63(a)ன்கீழ் அறநிலையத் துறை இணை ஆணையரிடம் மனு தாக்கல் செய்தார். மேற்படி மனுவினை முழுமையாக விசாரணை செய்து அம்மனுவினை இணை ஆணையர் தள்ளுபடி செய்து விட்டார். மேற்படி மனு தள்ளுபடியான பின்னர் மேற்படி கோவில் இந்து சமய அறநிலையத்துறை தனது ஆளுகைக்கு கொண்டு வந்தது. மேற்படி உத்தரவை எதிர்த்து எந்தவொரு நபரும் மேல்முறையீடு செய்யவில்லை. மேலும் மேற்படி தர்மராஜுவிற்கு இந்த மனுவின் 1ஆம் மனுதாரர் நான்காம் பங்காளி முறையாகும். மேற்படி உண்மைகள் மனுதாரர்களுக்கு தெரிந்திருந்தும் உள்நோக்கத்துடன் மறைத்ததால் மனுதாரரின் மனு suppression of material facts என்ற கோட்பாட்டின்கீழ் தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும்.

6. பின்னர் இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் 1973 முதல் 1978 வரை கோவிலை நிர்வாகம் செய்வதற்கு ஐவர் கொண்ட அறங்காவலர் குழு நியமிக்கப்பட்டது. மேற்படி நபர்கள் முறையே சிங்காரவேலு (5ஆம் எதிர்மனுதாரர்) ராமலிங்க வேளாளர், வைத்தியலிங்கம், தர்மராய வேளாளர், மெ. சீனிவாசன் ஆகியோர் ஆவார்கள். மேற்படி நபர்கள் முறையாக ஐந்து ஆண்டுகள் நிர்வாகம் செய்தனர். அதன்பின்னர் இரண்டாவது முறையாக ராஜப்பா, விஸ்வலிங்கம், அருணாச்சலம், மதியழகன், சுப்பிரமணியன் ஆகிய ஐந்து நபர்கள் இணை ஆணையர் மூலமாக அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர். பின்னர் மூன்றாம் முறையாக தர்மராசன், பழனிவேலு, சீனிவாசன் ஆகிய மூன்று நபர்கள் இணை ஆணையர் மூலமாக அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர். பின்னார் நான்காவது முறையாக ராமச்சந்திரன், பழனிவேலு, மகாலிங்கம், சந்திரன் மற்றும் வெ.ராமச்சந்திரன் ஆகிய ஐந்து நபர்கள் இணை ஆணையர் மூலமாக அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர். மேற்படி நான்காவது முறையாக அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்ட நபர்கள் தங்களது காலக்கட்டத்தில் ரூ.40,00,000,– வரை நன்கொடை வசூல் செய்து, இந்து சமய அறநிலைய

ஆட்சித்துறையிடமும் நிதிபெற்று திருப்பணிகள் செய்து கடந்த 16.05.2008ல் சிறப்பான முறையில் குடமுழுக்கு செய்தார். மேற்படி நான்குமுறைகள் வெவ்வேறு காலக் கட்டத்தில் வெவ்வேறு நபர்கள் இணை ஆணையர் மூலமாக அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர். மேற்படி உண்மைகள் மனுதாரர்களுக்கு நன்கு தெரிந்து வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் மறைத்து மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும்.

7. இந்த எதிர்மனுதாரர் தெரிவிப்பது என்னவென்றால், மனுதாரர்கள் 19.08.1911ம் தேதியிட்ட பத்திரப்படி வம்சாவழியைச் சேர்ந்த நபர்கள் அல்ல. ஏனெனில் மேற்படி 1911ம் ஆண்டு பத்திரப்படி 5 நபர்கள் தலைமையில் நிர்வாகம் செய்து வரவேண்டும் என்றும், மேற்படி நபர்கள் 10 ஆண்டுகளுக்கு மட்டும் நிர்வாகம் செய்து வரவேண்டும் என்றும், அதன்பின்னர் அவரது வாரிசுகள் நிர்வாகம் செய்து வரவேண்டும் என்றும் அப்பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை. இதனால் கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக மேற்படி ஷரத்துக்கள் அமுலுக்கு வரவில்லை. மேற்படி 5 நபர்களின் வாரிசுகள் கீழ்க்கண்ட நபர்கள் ஆவார்கள்.

முதல் கரை கோவிந்தசாமியின் வாரிசுகள்

கோவிந்தசாமி
↓
பெருமாள்
↓
தர்மராஜ்
↓
கோவிந்சாமி

முதல் கரை ராசப்பாவின் வாரிசுகள்

ராசப்பா வேளாளர்
↓
தர்மராஜன்
↓
ராசப்பா

இரண்டாவது கரை சொக்கலிங்க செட்டியாரின் வாரிசுகள்

சொக்கலிங்க செட்டியார்
↓
ராமசாமி செட்டியார்
↓
பெருந்தகை இளங்கோ

மூன்றாவது கரை கோவிந்தசாமி நாயக்கரின் வாரிசுகள்

கோவிந்தசாமி நாயக்கர்
↓
சுப்பையா நாயக்கர்
↓
தங்கராசு

நான்காவது கரை ரெங்கசாமி முதலியாரின் வாரிசுகள்

ரெங்கசாமி முதலியார்
↓
சிதம்பரம் முதலியார்
↓
ரெங்கசாமி

மேற்படி 5 தலைமைக்காரர்களின் வாரிசுகளில் பெருந்தகை இளங்கோ, ரெங்கசாமி அதாவது 3 மற்றும் 5வது மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். அதாவது 3ஆம் மனுதாரரான பெருந்தகை இளங்கோ தன்னை வழக்கிலிருந்து விடுவித்துவிட 17.06.2008ல் சமூகம் நீதிமன்றத்திற்கு கடிதம் மூலம் தெரிவித்து விட்டார். ஆதலால் 5 மனுதாரர்களில் 5ஆம் மனுதாரர் மட்டுமே 19.08.1911ம் தேதி ஏற்பட்ட பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தலைமைக்காரர்களின் வாரிசுதாரர்கள் ஆவார். இவ்வாறிருக்கையில் 19.08.1911ம் தேதியிட்ட பத்திரம் கருத்து வேறுபாடு காரணமாக நடைமுறைக்கு வராமல் இணை ஆணையர் மூலமாக நான்கு முறை வெவ்வேறான நபர்கள் அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் மனுதாரர்கள் மேற்படி உண்மைகளை மறைத்ததோடல்லாமல் வம்சாவழிப் பட்டியல் விவரங்களை முழுமையாக தெரிவிக்காமல் எயபரந ஆக தெரிவித்துள்ள காரணத்தினால் மனுாரர்களின் மனு தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும். மேலும் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு 2008ம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றபோது 5 தலைமைக்காரர்களில் தலா ஒரு நபரும் மேலும் கிராமவாசிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 நபர்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் ஆகக் கூடுதல் 18 நபர்கள்தான் கடந்த 10 ஆண்டுகளாக கோவிலை பராமரித்து நிர்வாகம் செய்து வருகின்றனர்.

8. மனுதாரர்கள் தங்கள் மனுவில் 1911ம் ஆண்டு ஏற்பட்ட பத்திரப்படி நிர்வாகம் செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட தலைமைக்காரர்கள் 5 நபர்களும் கோவிலின் முன்னேற்றத்திற்கு பல காரியங்கள் செய்துள்ளதாகவும், திருவிழா மற்றும் பூஜைகள் முறையாக நடத்தி வந்ததாக சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் உண்மையல்ல.

213



மேற்படி சங்கதிகள் அனைத்தும் மனுவிற்காக சொல்லப்பட்ட கற்பனையாகும். 1911ம் ஆண்டு ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி 10 ஆண்டுகளுக்கு பின்பு கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஏறக்குறைய 30 ஆண்டுகளாய் கோவில் பூட்டப்பட்டு விட்டது. எல்லாம் பொய்யான தகவலைக் கொடுத்து காரியம் செய்து கொள்ள நினைக்கின்றனர். 1958ம் ஆண்டின் ஆர்.எஸ்.ஆரில் சர்வே எண்.111ல் சுப்பிரமணியசாமி கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை பாதுகாக்கும் பொறுப்பு 1911ம் ஆண்டு செட்டில்மெண்ட்டில் கண்ட நபர்களை பொறுப்பாளர்களாக போடவில்லை. மாறாக கிராமத்தினர் அந்த சமயத்தில் யாரைப்போட வேண்டும் என்று முடிவு செய்து கோவில் நிலத்திற்கு பொருப்பாளர்களான அண்ணாமலை வேளாளர் மகன் தர்மராஜ், தர்மராஜ வேளாளர் மகன் ராஜப்ப வேளாளர், பொதியப்ப தொண்டமான் மகன் அருணாச்சால தொண்டமான், சொக்கலிங்க செட்டியார் மகன் ராமசாமி செட்டியார், ரெங்கசாமி முதலியார் மகன் சிதம்பர முதலியார் 1911ம் ஆண்டு செட்டில்மெண்ட்டுக்கும், 1958ம் ஆண்டு ஆர்.எஸ்.ஆருக்கு நிறைய வேற்றுமை உண்டு. எனவே இதை காரணம் காட்டுவது முறையும் இல்லை. ஏற்றுக்கொள்ளக்கூடியதுமல்ல. 1973க்குப் பிறகு அறநிலையத்துறையினரால் நியமிக்கப்பட்ட அறங்காவலர் குழுவே கோவில் நிலங்களையும் கோவிலையும் 2008ம் ஆண்டுவரை நிர்வாகம் செய்து வந்தது. இதை மறுத்துக் கூறும் சங்கதிகள் உண்மையானதல்ல. சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதும் அல்ல.

9. 2008க்கு பிறகு ஊர் நிர்வாகம் கோயில் நிர்வாகம் அனைத்தும் கீழ்க்கண்ட விபரப்படி நடந்து வருகிறது. நான்கு கரைகளிலிருந்தும் தலா ஒரு நபரும், கிராமத்தினரால் நியமனம் செய்யப்பட்ட 12 நபர்களும், பஞ்சாயத்து தலைவர், உப தலைவர் ஆகிய இருவரும் பஞ்சாயத்தாராக மொத்தம் 19 நபர்கள் சேர்ந்து நிர்வாகம் செய்து வருகின்றனர். பஞ்சாயத்தார் ஒன்றாக 19 நபர்களின் விபரம் பின்வருமாறு.

1. சிவக்குமார், த/பெ. ராமலிங்க வேளாளர்
2. இளங்கோவன், த/பெ. ராமசாமி செட்டியார்
3. ராஜேந்திரன், த/பெ. ராமலிங்க தொண்டமான்
4. ரெங்கசாமி, த/பெ. சிதம்பர முதலியார்
5. ராஜப்பன், த/பெ. தர்மராஜ வேளாளர்
6. சி.சிங்காரவேலு, த/பெ. சின்னப்பிள்ளை
7. செல்வபாண்டியன், த/பெ. சிவசாமி கோனார்

8. ராமலிங்கம், த/பெ. சின்னப்ப வேளாளர்

9. பழனிவேலு, த/பெ. அய்யாச்சாமி வேளாளர்

10. ச.நடேசன், த/பெ. சரவண வேளாளர்

11. தங்கவேலு, த/பெ. ரெங்கசாமி வேளாளர்

12. சக்திவேலு, த/பெ. கந்தசாமி வேளாளர்

13. சுப்பையன், த/பெ. ராமு வேளாளர்

14. அய்யாதுரை, த/பெ. சின்னப்ப வேளாளர்

15. ரெ.ராமசாமி, த/பெ. ரெங்கசாமி வேளாளர்

16. அழகராசு, த/பெ. ராமச்சந்திர வேளாளர்

17. பாலகிருஷ்ணன், த/பெ. தர்மராஜ் வேளாளர்

18. கோ.புருஷோத்தமன், த/பெ. கோவிந்த வேளாளர்

19. உதயகுமார், த/பெ. நாராயண வேளாளர்

மேலேகண்ட 19 நபர்கள் அடங்கிய குழுதான் கோவில், ஊர் ஆகியவற்றை 2012 வரை நிர்வாகம் செய்து வந்திருக்கின்றது. அப்படியிருக்க வம்சாவழியினர்தான் கோயில் நிர்வாகம் செய்து வருகின்றதென்று சொல்வது அப்பட்டமான பொய்யாகும். எனவே அவர்கள் மனுக்கள் யாவும் தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும்.

10. 2013ல் கோவில் செயல் அலுவலர் முன்னிலையில் கூடி 12 நபர்கள் கொண்ட குழு அமைத்து கோவில், ஊர் நிர்வாகம் ஆகியவற்றை பார்த்தனர். அந்த குழுவில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக இருந்தனர்.

1. சிவக்குமார், த/பெ. ராமலிங்க வேளாளர்

2. சின்னத்துரை, த/பெ. தர்மராஜ செட்டியார்

3. அய்யாதுரை, த/பெ. சின்னப்ப வேளாளர்

4. சுப்பையன், த/பெ. ராமு வேளாளர்

3. ராஜேந்திரன், த/பெ. ராமலிங்க தொண்டமான்

4. ரெங்கசாமி, த/பெ. சிதம்பர முதலியார்

5. ரமேஷ், த/பெ. விசுவலிங்க வேளாளர்

6. சக்திவேலு, த/பெ. கந்தசாமி வேளாளர்

7. சி.சிங்காரவேலு, த/பெ. சின்னப்பிள்ளை வேளாளர்

8. செல்வபாண்டியன், த/பெ. சிவசாமி கோனார்

9. ரவிச்சந்திரன், த/பெ. கார்த்திகேயன்

10. கோ.புருஷோத்தமன், த/பெ. கோவிந்த வேளாளர்

11. ச.நடேசன், த/பெ. சரவண வேளாளர்

12. சாமிநாதன், த/பெ. வெங்கடாசல வேளாளர்

இந்த 12 நபர்கள் கொண்ட குழு ஒரு வருடம் எல்லா காரியங்களையும் பார்த்து வந்தது. இப்படியிருக்க வம்சாவழி பரம்பரையினர்தான் பார்த்து வந்தார்கள் என்று கூறி வரும் மனுக்கள் அனைத்தும் உண்மைக்குப்புறம்பானதென்று தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

11. சென்ற ஆண்டு 2014ல் 9 நபர்கள் கொண்ட குழுவை கோவில் செயல் அலுவலர் முன்னிலையில் கிராமத்தினர் ஒன்று கூடி அமைத்தனர். அக்குழு உறுப்பினர்கள் விபரம் வருமாறு:

1. சிவக்குமார், த/பெ. ராமலிங்க வேளாளர்

2. சின்னத்துரை, த/பெ. தர்மராஜ செட்டியார்

3. ரமேஷ், த/பெ. விசுவலிங்க வேளாளர்

4. அய்யாதுரை, த/பெ. சின்னப்ப வேளாளர்

5. கோ.புருஷோத்தமன், த/பெ. கோவிந்த வேளாளர்

6. செல்வபாண்டியன், த/பெ. சிவசாமி கோனார்

7. ரவிச்சந்திரன், த/பெ. கார்த்திகேயன்

8. சாமிநாதன், த/பெ. வெங்கடாசல வேளாளர்

9. சுப்பையன், த/பெ. ராமு வேளாளர்

இந்த குழுவில் உள்ள சிவக்குமார் திருவிழாக் கணக்கை சரிவர கொடுக்காமல் கணக்கு வழக்குகளை செட்டில்பண்ட முடியாமல் ஸ்தம்பித்து கிடக்கின்றது. கிராம நிர்வாகமும், கோவில் காரியங்களையும் பரம்பரையினர்தான் இன்றுவரை கோவில் காரியங்களை செய்து வருகின்றோம் என்று சொல்லியிருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரார்கள் மனு பத்தி 13 முதல் 15ல் சொல்லியுள்ள சங்கதிகள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மேற்படி சங்கதிகள் அனைத்தும் மனுவிற்காக ஜோடிக்கப்பட்ட கற்பனை கூற்றுகளாகும்.

12. ஹரிஜன சமுதாயத்தினரை கோவிலுக்குள் விடுவதில்லை என்பதில் பழைய பஞ்சாங்கவாதிகள் திடமாக இருக்கின்றனர் எனவேதான் அவர்கள் பரம்பரை

அறங்காவலர் வேண்டுமென்று கேட்கின்றனர். அறநிலையத்துறையினர் ஏறக்குறைய 15 ஆண்டுகள் டிரஸ்ட்டிகள் போட்டதில் ஹரிஜன மக்களுக்கும் ஒவ்வொரு முறையும் தலா ஒரு நபர் டிஸ்ட்டி குழுவில் சேர்த்துள்ளதை பழமைவாதிகள் ஏற்கத் தயாரில்லை. இந்த ஒரு காரணத்திற்காகவே பரம்பரை, வம்சாவழி என்பதை மண்ணோடு மண்ணாக அடியோடு வேரறுக்க வேண்டிய கடப்பாடு அறநிலையத்துறைக்கு முக்கியமாகவும், அவசியமாகவும் இருக்க வேண்டும். தற்போது தம்பிஐயா வேளார் மகன் ராமசந்திரன் சிவசாமி வேளார் மகன் செல்லபாண்டியன், ராமலிங்க வேளார் மகன் சின்னதுரை, ராமலிங்க வேளார் மகன் ராஜேந்திரன் ஆகிய நபர்கள் 2015 கோவில் நிர்வாகம் செய்ய கிராமவாசிகளால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆகையால் சமூகம் கோர்ட்டாரவர்கள் தயவு செய்து மனுதாரர்களின் மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு பணிந்து வேண்டுகிறார்.

வழக்கறிஞர் 5ஆம் எதிர்மனுதாரர்

5ஆம் எதிர்மனுதாரராகிய நான் மேலே சொன்ன சங்கதிகள் யாவும் எனக்குத் தெரிந்த மட்டில் உண்மையானவை என்று உறுதிகூறி இன்று தஞ்சாவூரில் .05.2015ல் கையொப்பமிட்டுள்ளேன்.

// உண்மை நகல் //

5ஆம் எதிர்மனுதாரர்

மேலாளர்
இணை ஆணையர் அலுவலகம்
தஞ்சாவூர்

(3)

வழக்கறிஞர்/[illegible]:

திரு V. பாலமுரளி, B.A.,B.L.,

இந்து சமய அறநிலைய
ஆட்சித்துறை இணை
ஆணையர் : தஞ்சாவூர்

O.A.No. 5/2007
(அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி
கோவில், வெண்டாக்கோட்டை
கிராமம், பட்டுக்கோட்டை தாலூக்கா)

5ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும்
எதிருரை

---------

3/9/2015

Recd Copy

Advocate for Petn